செ.வெ.எண்.15 நாள்:08.05.2017

# திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சி மன்ற கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 39 பயனாளிகளுக்கு ரூ.7.65 லட்சம் மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம் அவர்கள் வழங்கினார்கள்.

-----

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சி மன்ற கூட்ட அரங்கில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம் அவர்கள் தலைமையில் இன்று (08.05.2017) நடைபெற்றது. பொதுமக்கள் ஏராளமானோர் கூட்டத்தில் கலந்து கொண்டு மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களிடம் கோரிக்கை மனுக்களை வழங்கினார்கள்.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம் அவர்கள் பாளையங்கோட்டை வட்டம் முன்னீர்பள்ளம் கிராமம் மேலத்திடியூரைச் சேர்ந்த பயனாளிகளுக்கு தலா 20,000 மதிப்பிலான வீட்டுமனை பட்டா 30 பயனாளிக்கும் மொத்தம் ரூ.6.00 லட்சம் மதிப்பிலும், மாண்புமிகு முதலமைச்சர் பொது நிவாரணநிதியிலிருந்து நிவாரணத் தொகை 4 நபர்களுக்கு ரூ.1.65 லட்சம் மதிப்பிலும், முதியோர் உதவித் தொகைக்கான உத்தரவு 3 நபர்களுக்கும், மாற்றுத்திறனாளிகள் உதவித் தொகை 2 நபர்களுக்கு என மொத்தம் 39 நபர்களுக்கு ரூ.7.65 லட்சம் மதிப்பிலான உதவித் தொகையினை மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் வழங்கினார்.

முன்னதாக மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொது மக்களிடமிருந்து முதியோர் உதவித் தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித் தொகை, முதிர்கன்னி உதவித் தொகை, பட்டா மாறுதல், குடிநீர், சாலை வசதிகள் உள்பட பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் பெற்று, சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி, விரைவில் பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட்டார்கள்.

இக்கூட்டத்தில், சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை ஆட்சியர் திரு.ஆர்.விஜயலெட்சுமி, மாவட்ட ஆத்திராவிடர் நல அலுவலர் திருமதி.எஸ்.நிர்மலா, உள்பட அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.